சிறுமிகள் முதல் பெண் கலெக்டர் வரை பாலியல் சீண்டல்கள்!

த.வெ.க. ஆட்சியில் இதுதான் பெண்களின் பாதுகாப்பா?

'தூய சக்தி' விஜய் கண்டுங்காணாமல் இருப்பது ஏன்?

"வடமாவட்டங்களில் கள்ளச் சாராய சாவுகள் அடிக்கடி நடைபெறும் மாவட்டமான குறிச்சி மாவட்டத்தில் இரண்டு பெயரை தன் பெயரில் கொண்டிருப்பவர் எம்.எல்.ஏ.வாக உள்ளார். இவர் வெளிநாடுகளில் பணி யாற்றி விட்டு, சென்னையில் சில காலம் பணியாற்றி னார். தேர்தலுக்கு ஓராண்டுக்கு முன்னர் தான் அரசியலுக்கு வந்தார். வந்தவருக்கு சீட் வழங்கப்பட்டு விட்டது.

புதிய மாவட்டமான இந்த மாவட்டத்தின் எம்.எல்.ஏ.வாக த.வெ.க. வைச் சேர்ந்தவர் வெற்றி பெற்றார். இளம் வாலிபர். இதனால் துடிப்புடன் வேலை செய்வார் என்று மக்கள் நினைத்தனர். ஆனால் இவர் வேலையைத் தவிர மற்ற வேலைகளில் துடிப்புடன் செயல்படத் தொடங்கிவிட்டார்.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் எம்.எல்.ஏ.வாக இருப்பதால், மாவட்டத்தின் பெண் கலெக்டர் இவருக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். அவரும் இளம் கலெக்டர் என்பதால், ஏதாவது மக்களுக்கு செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் இருப்பவர். இவரது கணவரும் பக்கத்து மாவட்டத்தில் கலெக்டராக இருப்பவர். அவரும் அதே போல மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைப்பவர்.

ஆனால், கலெக்டர் தனக்கு கொடுக்கும் மரியாதையை தவறாக புரிந்து கொண்ட எம்.எல்.ஏ. தவறான பொருள்படும்படி மெசேஜ் அனுப்பியுள்ளார். இரவில் நன்றாக குடிக்கும் பழக்கம் உள்ள எம்.எல்.ஏ. தினமும் இரவில் குடிப்பாராம். இந்தநிலை யில்தான் போதையில், தனது மாவட்டத்தின் பெண் கலெக்டருக்கு ஆபாச எஸ்.எம்.எஸ். அனுப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

மேலும், ஒரு நாளில் இரவில் வீட்டுக்கு வந்ததாகவும் கூறப்படுகிறது. அவரும் மக்கள் பிரதிநிதி என்பதால் மரியாதை கொடுத்து பேசியுள்ளார். ஆனால், அவரது பேச்சு சரியில்லை என்பதால், தனது கணவரிடம் கூறியுள்ளார். அவர் உடனடி யாக மனைவி பணி யாற்றும் மாவட்ட எஸ். பி.க்கு தகவல் கொடுத்துள்ளார். எஸ்.பி. பெண் என்பதால், புகாரின் தீவிரத்தை உணர்ந்து டி.எஸ்.பி.யை அனுப்பி விசாரித் துள்ளார். தற்போது கலெக்டருக்கு 24 மணி நேரமும் பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சி எம்.எல்.ஏ.வின் இந்த அத்துமீறல் குறித்து கட்சியின் பொதுச் செயலாளரும், விழுப்புரம் மாவட்டப் பொறுப்பாளருமான புஸ்ஸி ஆனந்தி டம் புகார் செய்யப்பட்டுள்ளது. அவர் சம்பந் தப்பட்ட எம்.எல்.ஏ. மற்றும் பெண் கலெக்டர் மற்றும் அவரது கணவர் ஆகியோரை நேரில் அழைத்து விசாரித்துள்ளார். பின்னர். இது குறித்து எம்.எல்.ஏ.வை கடுமையாக திட்டி அனுப்பியுள்ளார். ஆனால்எம்.எல்.ஏ.க்குஅடிவிழுந்ததாகவும் அவரது தொகுதியில் பேசும் பொருளாக உள்ளது. தற்போது ஒரு பெண் கலெக்ட ருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக புகார்கள் எழுந்துள்ளன.

இந்த விவகாரத்தை தற்போது மூடி மறைக்கும் வேலைகள் நடந்து வருகின் றன. கலெக்டரிடம் புகார்கொடுக்க வேண்டாம் என்று ஆளுங்கட்சி சார்பில் கோரப்பட்டதால் புகார்கள் கொடுக்காமல் மன்னித்து விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பெண் கலெக்டர் பெருந்தன்மையாக நடந்து கொண்டாலும், மக்கள் பிரதிநிதியான எம்.எல்.ஏ. தனது நிலையில் இருந்து தவறுவது நல்ல தல்ல. நாளை மக்கள் எப்படி இவரை நம்பி செல்ல முடியும் என்றும் பொது மக்களும், சமூக ஆர்வலர்களும் கேள்வி எழுப்புகின்றனர்.

"ஏற்கனவே ஒரு எம்.எல்.ஏ. மற்றும் கட்சி நிர்வாகிகள் மீது மகளிரணி நிர்வாகிகள் உட்பட பல பெண்கள் பாலியல் புகார் கொடுத்திருக்காங்க அதுக்கே இன்னும் பதில் கிடைக்கல. இப்போ பெண் கலெக்ட ருக்கே ஆளும் கட்சி எம்.எல்.ஏ. இரவில் வில்லங்க மெசேஜ் அனுப்பி இருக்காரே. இதை எப்படி சொல்லுவாங் கன்னு கேட் டோம். இதுதான் இந்த ஆட்சியில் பெண்களின் பாதுகாப்புக்கு சாட்சி.

நன்றி :
'தினகரன் அரசியல் டைரி'
10.11.2026



பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; தேனியிலே காவல்துறை சிறப்பு ஆய்வாளர் ஒருவர் அநியாயமா கொல்லப்பட்டிருக்கிறார். விஜய் அரசு, அவரது குடும்பத்திற்கு 40 லட்ச ரூபாய் நிதி உதவி அறிவிச்சிருக்கே! உயிரின் விலை அவ்வளவுதானா?

பட்டணம் : ஆமாமய்யா; நீங்க கேக்கறது நியாயம்தான். ஒரு விஷயம் தெரியுமா. போன மாசம் த.வெ.க. அரசு ஒரு ஜி.ஓ. போட்டது. அதில், 'காவல்துறை அதிகாரிகள் பணியின்போது உயிரிழந்தால் ஒரு கோடி ரூபாய் நிதி உதவி தரப்படும்ன்னு' சொன்னாங்க. இப்ப அவங்க ஜி.ஓ.வையே ஃபாலோ பண்ணல. நல்லாதான் நடக்குது த.வெ.க. ஆட்சி!

சிங்கம்புணரி நகரக் கழக முன்னாள் செயலாளர்

இரா.அ.கா.சிவஞானம் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் அஞ்சலி!

சிவகங்கை, நவ.11 - தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் தனிப் பணியாளர் கரு. செயல்மணியின் சம்பந்தி யும், சிங்கம்புணரி நகரக் கழக முன்னாள் செயலா ளர் இரா.அ.கா.சிவ ஞானம் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி இன்று (11.11.2026) சிங்கம் புணரியில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெறுகின்றது.



அன்னாரின் நினைவு நாளையொட்டி நினை வில் வாழும் இரா.அ.கா. சிவஞானம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழக முன்னணியினர், சிங்கம்புணரி நகரக் கழ கத்தினர் மலர் தூவி மரி யாதை செலுத்து கின்றனர்.

கெருகம்பாக்கம் ஆ.கோ.அரசு - சரோஜா இல்ல மணவிழா வரவேற்பு!

காஞ்சிபுரம், நவ. 11 –

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், கெருகம்பாக் கம் ஊராட்சிமன்ற முன்னாள் தலை வர் ஆ.கோ.அரசு – சரோஜா ஆகி யோரின் பேரனும், அ.வெற்றி செல்வன் – வெ.கல்பனா ஆகியோ ரின் புதல்வரு மான வெ.கவிபாரதிக் கும், மாங்காடு மு. பாண்டியன் – பா.சாந்தி ஆகியோரின் புதல்வி பா.மோனிசா வுக்கும் மணவிழா இன்று (11.11.2026 புதன்கிழமை) காலை 9 மணியளவில் பரணிபுத் தூர், போரூர் – மாங்காடு சாலையில் உள்ள சக்தி பேலஸ் திருமண மண் டபத்தில் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்பு நேற்று (10.11.2026 – செவ்வாய்) மாலை 6 மணியளவில் நடைபெற்றது,

இம்மணவிழாவில் கழகப் பொரு ளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட் டச் செயலாளர் – முன்னாள் அமைச் சர் தா.மோ.அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சென்னை மேற்கு மாவட்டச் செயலா ளர் நே.சிற்றரசு, ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோக ரன் ஆகியோர் பங்கேற்று மணமக் களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழாவில் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, ஏ.வந்தே மாதரம், ப.குணாளன், என்.சந்திரன், டி. பாபு, இ.மணி, சரஸ்வதி மனோக ரன், உமா மகேஸ்வரி, வந்தேமாத ரம், கோ.சத்தியமூர்த்தி, எஸ்.ஜப ருல்லா, எம்.கே.டி. கார்த்திக், அ. தமிழ் மாறன், கோல்டு டி. பிரகாஷ், பேராசிரியர் எல்.பிரபு, சாய் ஜெய் கார்த்தி பாரதி, எம்.எஸ்.கே. இப்ரா கிம், கே.எத்திராஜ், எம்.ஆர். சீனிவா சன், எஸ்.சதீஷ், இரா.பாஸ்கர், ஆர். டி.பூபாலன்,

வீ.விஜயகுமார், டி.கே.கமலக் கண்ணன், கோ.ஜானகிராமன், ப.ராமமூர்த்தி, கே.மணி கண்டன், து.சுந்தர், கே.வசீகரன், பொன். ஜீவா, பூங்கொடி அரசு, எஸ்.ராஜா தேசிங்கு, எக்.சந்தானம், பா. ராஜேந்திரன், எஸ்.கே. துளசிங்கம், தி.க. பாஸ்கரன், டி.எஸ்.எம்.ஜெயக ரன், டி.ஆர்.சாரதி உள்ளிட்ட கழகத் தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

அமெரிக்கத் தடையையும் மீறி சீனாவில் ஈரானின் எண்ணெய் விற்பனை!

ரகசியத் திட்டம் அம்பலம்!

நியூயார்க், நவ.11–

ஈரானின் தேசிய எண்ணெய் நிறுவனத்தின் (NIOC) முன்னாள் தலைவர் ஹமீத் போவார்ட் எழுதி யதாகக் கூறப்படும் இந்தக் கடி தம், அந்நாட்டின் எண்ணெய் வர்த்தகத்தில் பின்பற்றப்பட்டு வரும் உத்திகளை விவரிக்கிறது.

அமெரிக்காவின் பொருளாதா ரத் தடைகளையும் கட்டுப்பாடுக ளையும் மீறி, சர்வதேசச் சந்தை யில் தனது கச்சா எண்ணெயைத் தொடர்ந்து விற்பனை செய்வதற் காக ஈரான் புதிய வழிமுறைக ளைக் கையாண்டு வருவது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. குறிப்பாக, சீனாவில் உள்ள துறைமுகங்கள், எண்ணெய் சேமிப்புக் கிடங்குகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து வசதிகள் மூலம் தனது எண்ணெய் வர்த் தகத்தை ரகசியமாகத் தொடர ஈரான் திட்டமிட்டுள்ளதாகத் தக வல்கள் வெளியாகியுள்ளன. ஈரா னின் எண்ணெய் அமைச்சகத் தின் முன்னாள் உயரதிகாரி எழுதிய ரகசியக் கடிதம் கசிந்த தன் மூலம் இந்த நடவடிக்கை கள் குறித்த பல முக்கிய விவரங் கள் தற்போது தெரியவந்துள்ளன.

ஈரானின் தேசிய எண்ணெய் நிறுவனத்தின் (NIOC) முன்னாள் தலைவர் ஹமீத் போவார்ட் எழுதி யதாகக் கூறப்படும் இந்தக் கடி தம், அந்நாட்டின் எண்ணெய் வர்த்தகத்தில் பின்பற்றப்பட்டு வரும் உத்திகளை விவரிக்கிறது. அப்போது உச்சத் தலைவர் அலி கமேனியின் அரசியல் ஆலோச கராக இருந்த அலி ஷம்கானிக்கு அவர் இந்தக் கடிதத்தை எழுதி யுள்ளார். ஈரானின் முன்னாள் அதிபர் இப்ராஹிம் ரைசியின் ஆட்சிக்காலத்தில் பின்பற்றப்பட்ட எண்ணெய் விற்பனை முறைக ளையும், தற்போதைய அதிபர் மசூத் பெஷெஷ்கியான் தலை மையில் உருவாக்கப்பட்ட மாற் றுத் திட்டங்களையும் அதில் ஒப் பிட்டுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

செங்கை சிவம்

நவம்பர் 11 (2015)



இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக பெரம்பூர் பகுதிக் கழகச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் – தேர்தல் பணிக் குழுச் செயலாளர்– கலை,இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

1989, 1996–ல் பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

அகில இந்திய கூட்டுறவு வீட்டு வசதி வாரிய தலைவராக பொறுப்பு வகித்தவர்.

"பெரம்பூர் பகுதியில் கழகத்தை வளர்த்த காவலர்களில் ஒருவராகவும் விளங்கி, அருந்தொண்டாற்றிய அருமைத் தம்பி" என்று தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

முன்னாள் எம்.பி. எஸ்.அக்னிராஜின் மருமகள் –

பேராசிரியர் அ.செந்தில்ராஜன் மனைவி சுசித்திரா மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 11 –

முன்னாள் எம்.பி. எஸ்.அக்னிராஜின் மருமகள் – பேரா சிரியர் அ.செந்தில்ராஜன் மனைவி திருமதி சுசித்திரா மறைவுக்கு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங் கல் செய்தி வருமாறு:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.அக்னிராஜ் அவர்களின் மருமகளும், அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் அ.செந்தில்ராஜன் அவர்களின் மனைவியுமான திருமதி. சுசித்திரா அவர்கள் மறைவெய் திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரது மறைவு, குடும்பத்தினருக்கும் உற்றார் உறவி னர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து துயரத்தில் வாடும் பேராசிரியர் அ. செந்தில்ராஜன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை யும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

காளையார்கோவில் வடக்கு ஒன்றிய அவைத் தலைவர்

தமிழரசனின் தாயார் மரகதம் அம்மாள் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சிவகங்கை, நவ. 11- காளையார்கோவில் வடக்கு ஒன்றிய துரும்புப் பட்டி தி.மு.க. கிளைக் கழக மேனாள் செயலாளர் சுப்பி ரமணிய அம்பலகாரரின் மனைவியும், ஒன்றிய அவைத்தலைவர் தமிழரச னின் தாயாருமான மரகதம் அம்மாள் வயது மூப்பின் காரணமாக *கடந்த 7.11.2026* ஆம் தேதி இயற்கை எய்தி னார். என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.



அன்னாரது இறுதிச் சடங்குகள் நடைபெற்று, அவரது சொந்த ஊரான துரும்புபட்டியில் உள்ள இடு காட்டில் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி

நவம்பர் 11 (1989)



தென்னாற்காடு மாவட்டக் கழகச் செயலாளராகவும் – தமிழக சட்டப்பேரவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் தன்மான இயக்கத்தில் ஈடுபாடு உடையவராகி மாணவப் பருவத்தில் சுயமரியாதை கொள்கை பரப்பும் பணியில் ஈடுபட்டவர்.

அறிஞர் அண்ணா அவர்களிடம் பற்று கொண்டு தி.மு.க. துவக்கியநாள் முதல் அயராது பணியாற்றிய அஞ்சாநெஞ்சன்.

"கழகத்தின் வீரவேங்கை, சுயமரியாதைச்சுடர், மாவட்ட தளகர்த்தர், கழக உடன்பிறப்புகளுக்கு அரண்போல் விளங்கிய அடலேறு" என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.